


சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று (03.10.2025) அமைச்சர்கள் ஆர்.காந்தி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் கைத்தறித் துறை சார்பில் 03.10.2025 முதல் 17.10.2025 வரை நடைபெறும் தேசிய கைத்தறி கண்காட்சி 2025 ஐ தொடங்கி வைத்து கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கரூர் சம்பவம்

# மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு!

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து!

சென்னை, அக்.4-

கரூரில் த.வெ.க. கூட்டத்தில் 41 பேர் பலியானது மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கரூரில், த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் பலியாகியுள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் ரோட் ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க வேண்டும் என்றும், அதுவரை எந்தக் கட்சிகளுக்கும் ரோட் ஷோக்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த பி.ஹெச்.தினேஷ் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி என்.செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு அரசுத்தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கும் வரை எந்த கட்சிக்கும் பேரணி செல்ல அனுமதி வழங்கப்படாது என உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, த.வெ.க. கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன், நகர செயலாளர் பவுன்ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், துணைப்பொதுச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீதும் வழக்குப்பதிவு செய்துள்ளதாகவும், அவர்கள் இருவரும் முன் ஜாமீன் கோரியுள்ளனர் என்றும், புலன் விசாரணை நடந்து வருகிறது எனவும் காவல் துறை தரப்பில் ஆஜரான தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா விளக்கமளித்தார்.



இதையடுத்து நீதிபதி செந்தில்குமார், இந்தச் சம்பவத்தில் பலியானவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

பின்னர், வீடியோக்களை பார்க்கும் போது வேதனை அளிக்கிறது எனக் குறிப்பிட்ட நீதிபதி செந்தில் குமார், 2 பேர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனைத்தையும் அனுமதித்துள்ளீர்களா? என அதிருப்தி தெரிவித்தார்.

காவல் துறை கண்மூடிக் கொண்டிருக்க முடியாது. முதல்வர், எதிர்க்கட்சி தலைவர் என அனைவரும் சம்பவ இடம் சென்றுள்ளனர் எனத் தெரிவித்த நீதிபதி, நடிகர் விஜய் பயணித்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக வீடியோக்கள் வெளியாகியுள்ளன எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும் பல்வேறு கேள்விகளை நீதிபதி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர், த.வெ.க கேட்ட இடத்தை தான் ஒதுக்கினோம். 11 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இரு நிபந்தனைகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டன. மீதமுள்ள நிபந்தனைகள் மீறப்பட்டன. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அதே இடத்தில் பிரச்சாரம் செய்துள்ளார். த.வெ.க நிகழ்ச்சிக்கு 559 போலீசார் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்பட்டனர். அரசு மீது குறை கூறுவது எளிது. டிசம்பர் மாதம் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி திடீரென செப்டம்பருக்கு மாற்றப்பட்டுள்ளது என விளக்கம் அளித்தார்.

கரூரில் நடந்த சம்பவம், மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு. நீதிமன்றம் இதை கண்மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க இருக்க முடியாது. பொறுப்பை தட்டி கழிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

பின்னர், பெண்கள், குழந்தைகள் பலியான நிலையில், கட்சி தொண்டர்களை, ரசிகர்களை பொறுப்பற்ற முறையில் கைவிட்டு விட்டு ஓடிய, த.வெ.க. தலைவர் விஜய் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு தலைமைப் பண்பு இல்லை. சம்பவத்துக்கு பொறுப்பேற்கவும் இல்லை என கண்டனம் தெரிவித்தனர் நீதிபதிகள்.

### ஜாமீன் மனு நிராகரிப்பு!

இந்நிலையில், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தவெக நிர்வாகிகள் புஸ்ஸி ஆனந்த் மற்றும் சிடிஆர் நிர்மல் குமார் மமுன்ஜாமின் மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

அப்போது, புஸ்ஸி ஆனந்த், சிடிஆர் நிர்மல்குமார் ஆகியோர் முன் ஜாமீன் கோரிய மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

## திருவள்ளூர் மாவட்டம்

# பெரிய பாளையம் பின்னார் இரும்புத் தொழிற்சாலையில் ஆய்வு!

## அமைச்சர் எ.வ.வேலு மேற்கொண்டார்!

சென்னை, அக்.4

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகில் உள்ள PINNAR தொழிற்சாலையில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, நான்கு வழித்தட உயர் மட்ட மேம்பாலம் 3.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.621 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.



இம்மேம்பால கட்டுமானப் பணியை விரைவில், தரமான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு, முன்னோக்கிய கட்டமைப்பு (Prefabricated) முறையில், 16,300 டன் எஃகுக் கட்டமைப்புகள் (Pier, PierCap, Girder) மஹாராஸ்டிரம் மாநிலம், மும்பையில் உள்ள எஸ்.ஜி.ஹெவி இரும்பு தொழிற்சாலை, குஜராம் மாநிலம், வதோதராவில் உள்ள கே.பி. கிரீன் இரும்பு தொழிற்சாலை, ஆந்திரா மாநிலம், ஹைதராபாத்தில் உள்ள குளோபல் இரும்பு தொழிற்சாலை, சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள ஸ்ட்ரக் ரைட் இரும்பு தொழிற்சாலை மற்றும் தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகில் அமைந்துள்ள PINNAR இரும்பு தொழிற்சாலை ஆகிய ஐந்து எஃகு தொழிற்சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில், குஜராத், ஆந்திரா, மஹாராஸ்ட்டிரா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு முன்னரே சென்று அமைச்சர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

உயர்மட்ட மேம்பால பாலத்திற்கு தேவையான இரும்பு தூண்கள் (பியர்), இரும்பு தூண்களின் தலைப்புப் பகுதிகள் (பியர் கேப்) ஐகர்டர் (உத்திரங்கள்) தயாரிக்கப்பட்டு வரும், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகில் அமைந்துள்ள PINNAR இரும்பு தொழிற்சாலைக்கு நேற்று (03.10.2025) பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஐந்து தொழிற்சாலைகளிலும் சுமார் 16,300 டன் எடை கொண்ட இரும்பு தூண்கள் (பியர்) மற்றும் தலைப் பகுதிகள் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகில் உள்ள PINNAR தொழிற்சாலையில் சுமார் 1436 டன் எடை கொண்ட இரும்பு தூண்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வரும் இரும்பு தூண்கள் (பியர்) மற்றும் தலைப் பகுதிகள் பணிகள் பல்வேறு நிலையில் உள்ளது.

இந்த உயர்மட்ட மேம்பாலப் பணிகள் திட்டமிட்ட காலக்கெடுவிற்குள் முடிப்பதற்கு, தினசரி கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இரும்பு தூண்கள் தயாரிக்கப்பட்டவுடன், சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற்றும் PINNAR தொழிற்சாலையின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) உடனிருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் அயமிச்சேரி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டு தீர்வு கண்ட மனுக்கள் பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், வட்டாட்சியர் மோகன் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. கோமளா, தேவேந்திரன் பி.சேகர், டி.சஞ்சய் காந்தி, ஊராட்சி மன்ற தலைவர் ரவி, கிளை கழக நிர்வாகிகள் ஏ.நாகராஜ், கே.சிவகுமார், எம்.சசிகுமார், வி.பூவரசு, ஜே.ராகேஷ், பி.சதீஷ் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




